பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 7

குகைவாசிகள் பதிப்பகப் பாதை 14

ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு 21

முன்னுரை 23

1 ஜின்கள் குறித்த உண்மைநிலை 27

1. மறைவானவற்றின்மீது நம்பிக்கைகொள்ளுதல் 27
2. ஜின்கள் குறித்து இறக்கப்பட்டுள்ள குர்ஆன் வசனங்கள் 28
3. ஜின்கள் குறித்த நபிமொழிகள் 28
4. ஜின்கள் எதிலிருந்து படைக்கப்பட்டுள்ளார்கள்? 32
5. ஜின்களின் வகைகள் 32
6. ஜின்களின் வசிப்பிடங்கள் 33
7. ஜின்களும் உண்ணுகின்றனவா? பருகுகின்றனவா? 34
8. ஜின்கள் பல வடிவங்களில் தோன்றுகிறார்கள் 35
9. ஜின்களும் மனிதர்களைப்போல் பொறுப்பு சாட்டப்பட்டவர்களா? 40
10. ஜின்களின் கொள்கைகள், மதங்கள் 40
11. மனிதன்மீது ஜின்களின் பொறாமை 41

2 ஷைத்தான்களும் மனிதர்களும் 43

1. ஷைத்தான்கள் எப்போது பரவுகின்றன? 43
2. சில விலங்குகள் ஷைத்தான்களைப் பார்க்கின்றன 43
3. ஜின்கள் வானிலிருந்து செய்திகளை ஒட்டுக் கேட்கின்றன 44
4. ஜின்களுக்காக அறுத்துப் பலியிடுவது ஹறாம் 45
5. ஜின்களிடம் பாதுகாவல் தேடுவது தடுக்கப்பட்டது 45
6. ஜின்களிடம் உதவி கோருவதும் தடுக்கப்பட்டது 47
7. ஜின்கள் வீடுகளில் குடியிருக்குமா? 47

3 ஜின் மனிதனுக்குள் புகுவதின் உண்மைநிலை 51

1. ஜின் மனிதனுள் புகுந்துவிடுதலின் (பேய்பிடித்தல்) உண்மைநிலை 51
2. நபிமொழிகளில் ஆதாரங்கள் 52
3. அறிஞர்களின் கருத்துகள் 57
4. மருத்துவர்களின் கருத்துகள் 59
5. மார்க்கம் காட்டும் தீர்வு 60
6. ஜின்கள் மனிதனுள் புகுவதற்கான காரணங்கள் 63
7. மனித உடலில் ஜின் எவ்வாறு நுழைகிறது? எங்கே தங்கியிருக்கிறது? 64
8. ஜின் ஒரு மனிதனுக்குள் புகுந்துள்ளது என்பதற்கான அடையாளங்கள் 65
9. கனவில் வெளிப்படும் அடையாளங்கள் 65
10. நினைவில் வெளிப்படும் அடையாளங்கள் 66
11. நோயின் வகைகள் 66
12. சிகிச்சையளிப்பவருக்கு இருக்க வேண்டிய தகுதிகள் 67
13. எவ்வாறு சிகிச்சையளிப்பது? 68
14. ஜின் வந்து ஆஜராவதை எவ்வாறு அறிந்துகொள்ளலாம்? 78
15. ஜின் முஸ்லிமாக இருந்தால் அதனோடு எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்? 79
16. முஸ்லிமல்லாத ஜின்னுடன் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்? 80
17. சிகிச்சையளிப்பவருக்கு சில அறிவுரைகள் 82

4 எனது அனுபவங்கள் 88

அனுபவம் 1 88

அனுபவம் 2 89

அனுபவம் 3 90

அனுபவம் 4 91

அனுபவம் 5 95

5 ஜின்களால் பாதிக்கப்படாமல் இருக்க சில பொதுவான அறிவுரைகள் 100

1

ஜின்கள் குறித்த உண்மைநிலை

❁

1. மறைவானவற்றின்மீது நம்பிக்கைகொள்ளுதல்

இஸ்லாம் கூறும் அடிப்படைகளில் மறைவானவற்றின்மீது நம்பிக்கைகொள்வதும் ஒன்றாகும். இறையச்சமுடையோரின் முதல் பண்பே 'அவர்கள் மறைவானவற்றின்மீது நம்பிக்கைகொள்வார்கள்' என்பதுதான்.

الم ذَٰلِكَ الْكِتَابُ لَا رَيْبَ فِيهِ هُدًى لِلْمُتَّقِينَ الَّذِينَ يُؤْمِنُونَ بِالْغَيْبِ وَيُقِيمُونَ الصَّلَاةَ وَمِمَّا رَزَقْنَاهُمْ يُنْفِقُونَ

'அலிஃப். லாம். மீம். இதுதான் வேதமாகும். இதில் எத்தகைய சந்தேகமும் இல்லை. இது இறையச்சமுடையோருக்கு நேர்வழி காட்டியாகும். அவர்கள் மறைவானவற்றை நம்பிக்கை கொள்கிறார்கள். தொழுகையைத் தவறாது கடைப்பிடிக்கிறார்கள். நாம் அவர்களுக்கு வழங்கியவற்றிலிருந்து நல்வழியில் செலவும் செய்கிறார்கள்.' *(குர்ஆன் 2:1–3)*

அல்லாஹ்வும் அவனது தூதரும் அறிவித்த மறைவான விசயங்களின்மீது உறுதியான நம்பிக்கைகொள்வது ஒரு முஸ்லிமின் மீதுள்ள கடமையாகும். இப்னு மஸ்ஊது ﷺ அவர்களின் கூற்றுப்படி, 'அல்லாஹ்வும் அவனது தூதரும் அறிவித்த, நம் பார்வைக்குத் தென்படாத ஒவ்வொன்றும் மறைவானவையாகும்.'

அந்த வகையில் ஜின்களும் மறைவான விசயங்களில் ஒன்றாகும். குர்ஆன் மற்றும் நபிமொழிகளில் இதுகுறித்து ஏராளமான ஆதாரங்கள் காணப்படுகின்றன.

4. ஜின்கள் எதிலிருந்து படைக்கப்பட்டுள்ளார்கள்?

ஜின்கள் நெருப்பால் படைக்கப்பட்டுள்ளார்கள். குர்ஆன் மற்றும் நபிமொழிகளில் இதற்குத் தெளிவான ஆதாரங்கள் இருக்கின்றன.

وَخَلَقَ الْجَانَّ مِنْ مَارِجٍ مِنْ نَارٍ

'அவன் நெருப்புச் சுவாலையிலிருந்து ஜின்களைப் படைத்தான்.' *(குர்ஆன் 55:15)*

قَالَ أَنَا خَيْرٌ مِنْهُ خَلَقْتَنِي مِنْ نَارٍ وَخَلَقْتَهُ مِنْ طِينٍ

இப்லீஸ் கூறினான், 'நான் அவனை விடச் சிறந்தவன். நீ என்னை நெருப்பால் படைத்தாய். அவனையோ களிமண்ணால்தான் படைத்துள்ளாய்.' *(குர்ஆன் 38:76)*

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

خُلِقَتْ الْمَلَائِكَةُ مِنْ نُورٍ، وَخُلِقَ الْجَانُّ مِنْ مَارِجٍ مِنْ نَارٍ، وَخُلِقَ آدَمُ مِمَّا وُصِفَ لَكُمْ

'வானவர்கள் ஒளியால் படைக்கப்பட்டுள்ளார்கள். ஜின்கள் நெருப்புச் சுவாலையால் படைக்கப்பட்டார்கள். ஆதம் உங்களுக்கு குர்ஆனில் வருணிக்கப்பட்டவாறே படைக்கப்பட்டார். *(அறிவிப்பு: ஆயிஷா ؓ, முஸ்லிம் 2996, அஹ்மது 25194)*

இங்கு ஒரு கேள்வி எழலாம். ஜின்கள் நெருப்பால் படைக்கப்பட்டால் அவர்களிலுள்ள நிராகரிப்பாளர்கள் எவ்வாறு நெருப்பால் வேதனை செய்யப்படுவார்கள்? மனிதன் மண்ணால்தான் படைக்கப்பட்டான். ஆனால், இப்போது அவன் மண்ணாக இல்லை. அதேபோல்தான் ஜின்களும். அவர்கள் நெருப்பால் படைக்கப்பட்டாலும் இப்போது அவர்கள் நெருப்பாக இல்லை.

5. ஜின்களின் வகைகள்

நபியவர்கள் கூறியதாக அபூசஃலபா அல்கஷனீ ؓ அறிவிக்கிறார்:

اَلْجِنُّ ثَلَاثَةُ أَصْنَافٍ: صِنْفٌ لَهُمْ أَجْنِحَةٌ يَطِيرُونَ فِي الْهَوَاءِ، وَصِنْفٌ حَيَّاتٌ وَكِلَابٌ، وَصِنْفٌ يَحِلُّونَ وَيَظْعَنُونَ

'ஜின்களில் மூன்று வகைகள் உள்ளன. அதில் ஒருவகை இறக்கைகள் கொண்டு காற்றில் பறக்கக்கூடிய ஜின்களாகும். இரண்டாவது வகை பாம்புகளாகவும், தேள்களாகவும் இருக்கக்கூடிய ஜின்களாகும். மூன்றாவது வகை பயணம் செய்யக்கூடிய, ஓரிடத்தில்

9. ஜின்களும் மனிதர்களைப்போல் பொறுப்பு சாட்டப்பட்டவர்களா?

ஆம். ஜின்களும் மனிதர்களைப் போன்று மார்க்கரீதியான பொறுப்பு சாட்டப்பட்டவர்கள்தாம். பல குர்ஆன் வசனங்கள் ஜின்களையும் விளித்தே பேசுகின்றன.

يَا مَعْشَرَ الْجِنِّ وَالْإِنْسِ أَلَمْ يَأْتِكُمْ رُسُلٌ مِنْكُمْ يَقُصُّونَ عَلَيْكُمْ آيَاتِي وَيُنْذِرُونَكُمْ لِقَاءَ يَوْمِكُمْ هَذَا قَالُوا شَهِدْنَا عَلَى أَنْفُسِنَا وَغَرَّتْهُمُ الْحَيَاةُ الدُّنْيَا وَشَهِدُوا عَلَى أَنْفُسِهِمْ أَنَّهُمْ كَانُوا كَافِرِينَ

'ஜின் மற்றும் மனித சமூகமே, உங்களிலிருந்தே தூதர்கள் உங்களிடம் வரவில்லையா? அவர்கள் என் வசனங்களை எடுத்துரைத்து, இந்நாளின் சந்திப்பைக் குறித்து உங்களுக்கு எச்சரிக்கை செய்யவில்லையா' என்று அல்லாஹ் கூறுவான். அதற்கு அவர்கள், 'நாங்கள் எங்களுக்கு எதிராக சாட்சி கூறுகிறோம்' என்று கூறுவார்கள். இவ்வுலக வாழ்வு அவர்களை ஏமாற்றத்தில் ஆழ்த்திவிட்டது. 'நாங்கள் நிராகரிப்பாளர்களாகத் தான் இருந்தோம்' என்று அவர்கள் தங்களுக்கு எதிராகத் தாங்களே சாட்சி கூறுவார்கள்.' *(குர்ஆன் 6:130)*

இந்த விசயத்தில் அறிஞர்களிடையே எந்தக் கருத்துவேறுபாடும் அறியப்படவில்லை.

10. ஜின்களின் கொள்கைகள், மதங்கள்

மனிதர்களிடையே பல்வேறு கொள்கைகள், கோட்பாடுகள் காணப்படுவது போன்று ஜின்களிடையேயும் பல்வேறு கொள்கைகளும் கோட்பாடுகளும் காணப்படுகின்றன. இறை நம்பிக்கை கொண்டவர்கள், இறைநம்பிக்கையற்றவர்கள் மற்றும் பல பிரிவினர்கள் அவர்களிடையே உண்டு. அவர்களைக் குறித்து அவர்களே கூறுகிறார்கள்:

وَأَنَّا مِنَّا الصَّالِحُونَ وَمِنَّا دُونَ ذَلِكَ كُنَّا طَرَائِقَ قِدَدًا

'எங்களில் சிலர் நல்லவர்களாக இருக்கிறார்கள். சிலர் வேறு விதமாகவும் இருக்கிறார்கள். நாங்கள் பல்வேறு வழிகளில் சிதறிக் கிடக்கிறோம்.' *(குர்ஆன் 72:11)*

இந்த வசனத்திற்கு விளக்கமாக இமாம் இப்னு தைமிய்யா ﵀ கூறுகிறார்: 'அவர்களிடையேயும் முஸ்லிம்கள், நிராகரிப்பாளர்கள்,

2

ஷைத்தான்களும் மனிதர்களும்

❁

1. ஷைத்தான்கள் எப்போது பரவுகின்றன?

நபி ﷺ அவர்கள் கூறியதாக ஜாபிர் ؓ அறிவிக்கிறார்:

ِذَا كَانَ جُنْحُ اللَّيْلِ، أَوْ أَمْسَيْتُمْ، فَكُفُّوا صِبْيَانَكُمْ، فَإِنَّ الشَّيَاطِينَ تَنْتَشِرُ حِينَئِذٍ، فَإِذَا ذَهَبَ سَاعَةٌ مِنَ اللَّيْلِ فَخُلُّوهُمْ، فَأَغْلِقُوا الأَبْوَابَ وَاذْكُرُوا اسْمَ اللَّهِ، فَإِنَّ الشَّيْطَانَ لاَ يَفْتَحُ بَابًا مُغْلَقًا، وَأَوْكُوا قِرَبَكُمْ وَاذْكُرُوا اسْمَ اللَّهِ، وَخَمِّرُوا آنِيَتَكُمْ وَاذْكُرُوا اسْمَ اللَّهِ، وَلَوْ أَنْ تَعْرُضُوا عَلَيْهَا شَيْئًا، وَأَطْفِئُوا مَصَابِيحَكُمْ

‘இரவின் இருள் படரத் தொடங்கிவிட்டால் உங்கள் குழந்தைகளை வீட்டில் தடுத்து வைத்துக் கொள்ளுங்கள். ஏனெனில், அச் சமயத்தில்தான் ஷைத்தான்கள் பரவுகின்றன. இரவு வேளையில் சிறிது நேரம் கழிந்துவிட்டால் அவர்களை விட்டுவிடுங்கள். மேலும் வீட்டின் கதவுகளை அடைத்துவிடுங்கள். அப்போது அல்லாஹ்வின் பெயர் சொல்லுங்கள். ஏனெனில், ஷைத்தான்கள் அடைக்கப்பட்ட கதவுகளைத் திறப்பதில்லை. தூங்குவதற்கு முன்னர் (சிம்னி) விளக்குகளை அணைத்துவிடுங்கள். அப் போதும் அல்லாஹ்வின் பெயரைச் சொல்லுங்கள். உங்கள் தண்ணீர்ப் பைகளைச் சுருக்கிட்டு மூடிக் கொள்ளுங்கள். பாத்திரங் களை மூடிவையுங்கள். அவற்றை மூடாவிட்டால் அவற்றின்மீது எதையாவது குறுக்காக வைத்தேனும் மூடிவிடுங்கள்.’ (புகாரீ 5623, முஸ்லிம் 2012)

2. சில விலங்குகள் ஷைத்தான்களைப் பார்க்கின்றன

நபியவர்கள் கூறியதாக அபூ ஹுறைறா ؓ அறிவிக்கிறார்:

إِذَا سَمِعْتُمْ صِيَاحَ الدِّيَكَةِ فَاسْأَلُوا اللَّهَ مِنْ فَضْلِهِ فَإِنَّهَا رَأَتْ مَلَكًا، وَإِذَا سَمِعْتُمْ نَهِيقَ الحِمَارِ فَتَعَوَّذُوا بِاللَّهِ مِنَ الشَّيْطَانِ فَإِنَّهُ رَأَى شَيْطَانًا

கூறினால் அவர் அங்கிருந்து செல்லும் வரை அவருக்கு எந்தத் தீங்கும் நேராது.' (முஸ்லிம் 2708)

6. ஜின்களிடம் உதவி கோருவதும் தடுக்கப்பட்டது

சூனியக்காரர்கள், குறிசொல்பவர்கள் ஜின்களிடம் உதவி கோருதல் மூலமாகவே தங்கள் காரியங்களை அமைத்துக்கொள்கிறார்கள். இது தெளிவான இணைவைப்பாகும். அல்லாஹ் அல்லாதவற்றிடம் உதவிகோருவது இணைவைப்பாகும். சூனியக்காரர்கள் அல்லாஹ்வுக்கு இணைவைக்கும் காரியங்களைச் செய்யாத வரை ஷைத்தான்கள் அவர்களுக்கு உதவிசெய்யமாட்டார்கள். இணைவைக்கும் காரியங்களின் மூலமே ஷைத்தான்கள் சூனியக்காரர்களை நெருங்குகிறார்கள். நாங்கள் சிறுவயதினராக இருந்தபோது பிரபல்யமான ஒரு சூனியக்காரனைப் பார்த்திருக்கிறோம். அவன் குர்ஆனைச் செருப்பாக காலில் அணிந்துகொண்டு கழிவறைக்குச் செல்வான். அதன் பின்னரே ஜின்கள் அவனிடம் வந்து உதவிசெய்யத் தொடங்கின.

இத்தகைய இழிவான செயல்கள் தெளிவான குஃப்ர் ஆகும். மிகவும் கவலைக்குரிய விசயம் என்னவெனில் முஸ்லிம் பெயர் தாங்கிய சூனியக்காரர்கள் தாயத்துகளில், தகடுகளில் ஷிர்க்கான வாசகங்களையும் அதனோடு சில குர்ஆன் வசனங்களையும் எழுதி தொங்கவிடுகிறார்கள். ஒன்றுமறியாத மக்கள் அனைத்தும் குர்ஆன்தான் என்று எண்ணிவிடுகிறார்கள். தங்களை அறியாமலேயே இணைவைப்பில் விழுந்துவிடுகிறார்கள். நான் இத்தகைய தாயத்துகளில், தகடுகளில் ஷிர்க் அல்லாத வாசகங்களை மிகக் குறைவாகத்தான் கண்டிருக்கிறேன். இத்தகைய சூனியக்காரர்கள் தொழுதாலும் நோன்பு நோற்றாலும் அவர்கள் இணைவைப்பாளர்களே. இவ்வுலகையும் மறுவுலகையும் அவர்கள் இழந்து விட்டார்கள்.

7. ஜின்கள் வீடுகளில் குடியிருக்குமா?

குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட வீட்டில் ஜின்கள் குடியிருக்கிறது என்று அவ்வப்போது மக்களிடையே பிரபல்யமாகப் பேசப்படுகிறதே? இத்தகைய செய்திகள் உண்மையாகுமா?

இதில் உண்மையும் பொய்யும் கலந்துள்ளது என்று கூறுவதே சரியாக இருக்கும். மார்க்க அடிப்படையில் பார்க்கும்போது இவ்

3

ஜின் மனிதனுக்குள் புகுவதின் உண்மைநிலை

❁

1. ஜின் மனிதனுள் புகுந்துவிடுதலின் [பேய்பிடித்தல்] உண்மைநிலை

மனிதனுள் புகுந்துவிட்ட ஜின் அவனது மூளையை ஆக்கிரமித்துக் கொள்கிறது. இதனால் பாதிக்கப்பட்டவன் தான் என்ன கூறுகிறான், என்ன செய்கிறான் என்பதைக்கூட அறியாதவனாகிவிடுகிறான். இவ்வாறு நிகழ்வது மார்க்க அடிப்படையில் சாத்தியமே. அனுபவங்களும் இதனை உறுதிப்படுத்துகின்றன. பிடிவாதமுடைய ஆணவக்காரன் மட்டுமே இதனை மறுக்க முடியும். அல்லாஹ் கூறுகிறான்:

اَلَّذِينَ يَأْكُلُونَ الرِّبَا لَا يَقُومُونَ إِلَّا كَمَا يَقُومُ الَّذِي يَتَخَبَّطُهُ الشَّيْطَانُ مِنَ الْمَسِّ

'வட்டியை உண்பவர்கள் மறுமைநாளில் ஷைத்தான் தீண்டியதால் பைத்தியம் பிடித்தவர்களைப் போலல்லாமல் எழமாட்டார்கள்.' (குர்ஆன் 2:275)

இமாம் குர்துபீ ﵀ கூறுகிறார்: 'இந்த வசனம் எவர்கள், 'ஜின் மனிதனுள் புகமுடியாது' என்று கூறுகிறார்களோ அவர்களுக்கு எதிரான ஆதாரமாக இருக்கின்றது.' இமாம் தபரீ[6], இமாம் இப்னுல் கய்யிம் இருவரும் தங்களின் குர்ஆன் விளக்கவுரையில், 'இவ்வுல

---

6 தபரீ: அபூஜஅஃபர் முஹம்மது இப்னு ஜரீர் அத்தபரீ ﵀ ஆகிய இவர்கள், மேற்கு ஈரானிலுள்ள தப்ரிஸ்தான் நகரில் ஹிஜ்ரீ 225 (கி.பி. 839)இல் பிறந்தார்கள். ஹதீஸ், குர்ஆன் விரிவுரை, வரலாறு உள்ளிட்ட துறைகளின் பேரறிஞராக விளங்கிய இவர்கள், 'ஜாமிஉல் பயான் ஃபீ தஃப்ஸீலில் குர்ஆன்' எனும் பெயரில் குர்ஆனுக்கு மகத்தான விரிவுரை எழுதினார்கள். இன்று தஃப்சீர் தபரீ எனக் கூறப்படும் இதுதான். இன்றுள்ள தஃப்சீர்களிலே மிகப் பழமையானது. ஹிஜ்ரீ 310 (கி.பி. 923)இல் இராக்கின் பஃக்தாத் நகரில் மரணித்தார்கள்.

6. ஜின்கள் மனிதனுள் புகுவதற்கான காரணங்கள்

இமாம் இப்னு தைமிய்யா ﷺ கூறுகிறார்: 'ஜின் மனிதனுள் புகுவது மனிதன் மீதுள்ள காதலால், இச்சையால் இருக்கலாம். ஜின் மனிதனோடு மணஉறவு கொண்டு பிள்ளைகளையும் பெற்றெடுக்கலாம். இதுகுறித்து அறிஞர்கள் விவாதித்துள்ளார்கள். அறிஞர்களில் பெரும்பாலோர் ஜின்களோடு மணமுடித்துக் கொள்வதை வெறுத்திருக்கிறார்கள். மனிதன் தான் அறியாதவாறு ஜின்களின்மீது சிறுநீர் கழித்தல், கொதிக்கும் நீரை ஊற்றுதல் போன்ற தீங்குகளை இழைத்திருக்கலாம். இதனால் ஜின்கள் பழிவாங்கும் நோக்கோடு அவனுள் புகுந்துவிடலாம். ஜின்களிடம் அறியாமையும், அக்கிரமும் மிகுந்து காணப்படுகிறது. காதல், அக்கிரமம் இந்த இரண்டு காரணங்களே ஜின்கள் மனிதனுள் புகுவதற்கான முக்கியக் காரணமாக இருக்கின்றன.

முதல் வகை காரணம், மானக்கேடான காரியங்களில் ஒன்றாகும். இருவரும் ஒருவருக்கொருவர் சம்மதித்தால்கூட இவ்வகையான காரியங்களில் ஈடுபட முடியாது. மற்றவரின் அனுமதியின்றி எவ்வாறு ஈடுபட முடியும்? எனவே ஜின்னுடன் பேசி இதனைப் புரியவைக்க முயற்சிக்க வேண்டும். அல்லாஹ்வும் அவனது தூதரும் இட்ட கட்டளைகளை அதற்கு எடுத்துரைக்க வேண்டும். 'உனக்கு இந்த மனிதனுள் அவனது அனுமதியின்றி இருக்க அனுமதியில்லை. ஆள்அரவமற்ற காடுகளிலும் பாலைவனங்களிலும் உன் வசிப்பிடங்களை அமைத்துக் கொள்' என்று அதற்குக் கூற வேண்டும். அல்லாஹ்வும் அவனது தூதரும் இட்ட கட்டளைகளை எடுத்துரைத்து முதலில் ஆதாரத்தை நிலைநாட்டிவிட வேண்டும்.

يَا مَعْشَرَ الْجِنِّ وَالْإِنْسِ أَلَمْ يَأْتِكُمْ رُسُلٌ مِنْكُمْ يَقُصُّونَ عَلَيْكُمْ آيَاتِي وَيُنْذِرُونَكُمْ لِقَاءَ يَوْمِكُمْ هَذَا

'ஜின் மற்றும் மனித சமூகமே, உங்களிலிருந்தே தூதர்கள் உங்களிடம் வரவில்லையா? அவர்கள் என் வசனங்களை எடுத்துரைத்து, இந்நாளின் சந்திப்பைக் குறித்து உங்களுக்கு எச்சரிக்கை செய்யவில்லையா?' *(குர்ஆன் 6:130)*

ஜின்கள் மனிதனுள் புகுவதற்கான காரணங்களைப் பின்வருமாறு கூறலாம்.

1. ஜின் மனிதன்மீது காதல்கொள்ளுதல்

நபியே இப்படிக் கூறுங்கள்: 'அல்லாஹ், அவன் ஏகன். அல்லாஹ் தேவையற்றவன். அவனுக்கு யாரும் சந்ததி இல்லை; அவன் யாருடைய சந்ததியுமில்லை. அவனுக்கு நிகராக எவரும் இல்லை. (குர்ஆன் 112:1-4)

قُلْ أَعُوذُ بِرَبِّ الْفَلَقِ مِنْ شَرِّ مَا خَلَقَ وَمِنْ شَرِّ غَاسِقٍ إِذَا وَقَبَ وَمِنْ شَرِّ النَّفَّاثَاتِ فِي الْعُقَدِ وَمِنْ شَرِّ حَاسِدٍ إِذَا حَسَدَ

நபியே இப்படிப் பிரார்த்தியுங்கள்: 'அதிகாலையின் இறைவனிடம், அவன் படைத்தவற்றின் தீங்கிலிருந்தும், இருள் படர்ந்து விடும்போது ஏற்படும் தீங்கிலிருந்தும், முடிச்சுகளில் ஊதுகின்றவர்களின் தீங்கிலிருந்தும் பொறாமைக்காரன் பொறாமை கொள்ளும்போது ஏற்படும் தீங்கிலிருந்தும் நான் பாதுகாவல் தேடுகிறேன்.' (குர்ஆன் 113:1-5)

இவ்வாறு ஓதிப்பார்க்கும்போது நிச்சயம் பாதிக்கப்பட்டவரின் உடலினுள் இருக்கும் ஜின் பாதிப்பிற்குள்ளாகும். ஒன்று அது பயந்து அந்த மனிதனை விட்டு ஓடிவிடும். இல்லையெனில் அந்த மனிதனின் நாவில் பேச ஆரம்பிக்கும். முடிந்த அளவு ஷைத்தானைச் சந்திப்பதைத் தவிர்க்க வேண்டும். ஏனெனில், நபியவர்கள் கூறியுள்ளார்கள்:

لَا تَتَمَنَّوْا لِقَاءَ الْعَدُوِّ

'எதிரிகளைக் களத்தில் சந்திப்பை விரும்பாதீர்கள்.' (அப்துல்லாஹ் இப்னு அபீ அவ்ஃபா ﷺ, புகாரீ 2965, முஸ்லிம் 1742)

அல்லாஹ் கூறுகிறான்:

إِنَّ الشَّيْطَانَ لَكُمْ عَدُوٌّ

'நிச்சயமாக ஷைத்தான் உங்களுக்கு எதிரிதான்.' (குர்ஆன் 35:6)

14. ஜின் வந்து ஆஜராவதை எவ்வாறு அறிந்துகொள்ளலாம்?

பின்வரும் அடையாளங்களைக் கொண்டு ஜின் வந்து ஆஜராவதை அறிந்துகொள்ளலாம்:

1. பாதிக்கப்பட்டவர் கண்களை மூடுதல் அல்லது அவரது பார்வை நிலைகுத்தி இருத்தல் அல்லது இருகைகளையும் கண்களின்மீது வைத்தல்.

4

எனது அனுபவங்கள்

❁

அனுபவம் 1

நோய்வாய்ப்பட்ட ஒரு பெண்ணுக்கு ஓதிப் பார்த்தேன். அவள் நடுங்கினாள். நான் கேட்டேன், 'நம்முடன் இருப்பது யார்?' அதற்கு அந்த ஜின் 'ஷெய்க் முஹம்மது' என்று பேச ஆரம்பித்தது. அப்போது எனக்கும் அந்த ஜின்னிற்கும் நடைபெற்ற உரையாடல்:

'முஹம்மது, நீ எதற்காக இந்தப் பெண்ணின் உடலிற்குள் புகுந்திருக்கிறாய்?'

'குளியலறையில் இவள் என்மீது விழுந்துவிட்டாள்.'

'அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிந்து அவளை விட்டு வெளியேறிவிடு.'

'இல்லை. நான் ஒருபோதும் வெளியேறமாட்டேன்.'

'அப்படியென்றால் கேள்' என்று கூறி நான் அஸ்ஸாஃப்ஃபாத் என்ற அத்தியாயத்தை ஓதினேன். அது வலியால் அழ ஆரம்பித்து 'நான் வெளியேறி விடுகிறேன்' என்று கூறியது.

'இப்போதே வெளியேறிவிடு' என்று நான் கூறினேன். அது தயங்கியது.

'அப்படியென்றால் மறுபடியும் கேள்' என்று கூறி ஜின் என்ற அத்தியாயத்தை ஓதினேன்.

'என்னை விட்டுவிடுங்கள். நான் வெளியேறிவிடுகிறேன். அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறி வெளியேறிவிட்டது. அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.

5

ஜின்களால் பாதிக்கப்படாமல் இருக்க சில பொதுவான அறிவுரைகள்



1. நபியவர்கள் கற்றுத் தந்த பிரார்த்தனைகளையும், திக்ருகளை யும் முறையாகக் கடைப்பிடியுங்கள்.
2. உயரமான இடத்தில் ஏறும்போது பிஸ்மில்லாஹ் சொல்லிக் கொள்ளுங்கள்.
3. இருட்டான அறையில் நுழையும்போது பிஸ்மில்லாஹ் கூறிக் கொள்ளுங்கள்.
4. நாயையோ பூனையையோ துன்புறுத்தாதீர்கள்.
5. பொந்துகளில் சிறுநீர் கழிக்காதீர்கள்.
6. தனியாகத் தூங்காதீர்கள். நிர்ப்பந்தம் ஏற்பட்டால் வுளூ செய்து விட்டு இரவில் ஓதவேண்டிய திக்ருகளை ஓதிக்கொள்ளுங்கள்.
7. உங்கள் வீடுகளில் பாம்பு தென்பட்டால் உடனே அதனை அடித்துவிடாதீர்கள். அதற்கு மூன்றுமுறை வெளியேறுமாறு எச்சரிக்கை செய்யுங்கள். அது வெளியேவில்லையெனில் அடித்துக் கொன்றுவிடுங்கள்.
8. ஆள்அரவமற்ற பாலைவனத்தில் இரவில் தனியாகப் பயணம் செய்யாதீர்கள்.
9. தரையில் கனமான ஏதேனும் பொருளை எறிவதாக இருந்தால் பிஸ்மில்லாஹ் சொல்லி எறியுங்கள்.